# முழங்கால் யுத்தம்

## "வெற்றி வாழ்விற்காக"



THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

## To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

## To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

## About Word of God Ministries

**Word of God Ministries** was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

# முழங்கால் யுத்தம்

## 'வெற்றி வாழ்விற்காக'



'விசுவாசம் என்பது... நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறவை கிடைக்கும் என்னும் நிலையான உறுதிப்பாடு' (எபிரெயர் 11:1)

ஊழியர் L. ஜோசப்

## உங்களோடு!

**"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (கலா 3:11)**

***நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உன்னதமான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!***

**''முழங்கால் யுத்தம் - வெற்றி வாழ்விற்காக''** என்கிற விசுவாச ஜெபக்கையேட்டை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்! நம் வாழ்க்கையில் அன்றாடம் ஏற்படும் பிரச்சினைகளினால் தோல்விகள், பயங்கள், சோர்வுகளினால் கலங்கித் தவிக்கிறோம்! மற்றும் நம் வாழ்க்கையில் காணப்படும் பாவங்கள், சாபங்கள், குறைவுகள், சத்துருவின் தாக்குதல்களினால் பிரச்சினைகளை மேற்கொள்ள முடியாமல் திகைக்கிறோம்! இச்சூழ்நிலைகளில் விசுவாசத்தோடு ஆபிரகாமைப் போன்று வாக்குத்தத்த வசனங்களை அறிக்கையிட்டு ஜெயத்தைப் பெற்றுக் கொள்ள இதனை ஆயத்தப்படுத்தியுள்ளோம்!

''ஆபிரகாம் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; தேவனுடைய வாக்குத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழுநிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப் படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான் (ரோம 4:19-21).

இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிற தேவன் உங்கள் விசுவாச அறிக்கையை கனப்படுத்தி உங்கள் வாழ்வின் இக்கட்டான சூழ்நிலைகளை சாதகமாய் மாற்றுவார்! விசுவாசத்தோடு தொடர்ந்து தேவனிடத்தில் அறிக்கைசெய்தால் பிரச்சினைகளை மேற்கொள்வது நிச்சயம்!

***அன்பும்! ஜெபமும்!!*** *L. ஜோசப்*

## உள்ளே...


I. தேவனை ஸ்தோத்தரிப்போம் 6

II. விசுவாச அறிக்கைகள்

1. அவிசுவாசத்தை மேற்கொள்ளுங்கள்! 8
2. பிரச்சினையை மேற்கொள்ளுங்கள்! 10
3. பாவத்தை மேற்கொள்ளுங்கள்! 12
4. சாபத்தை மேற்கொள்ளுங்கள்! 14
5. கோபத்தை மேற்கொள்ளுங்கள்! 16
6. இச்சையை மேற்கொள்ளுங்கள்! 18
7. பெருமையை மேற்கொள்ளுங்கள்! 20
8. தாழ்வுமனப்பான்மையை மேற்கொள்ளுங்கள்! 22
9. அடிமைத்தனத்தை மேற்கொள்ளுங்கள்! 24
10. சத்துருவை மேற்கொள்ளுங்கள்! 26
11. தோல்வியை மேற்கொள்ளுங்கள்! 28
12. பயத்தை மேற்கொள்ளுங்கள்! 30
13. கவலையை மேற்கொள்ளுங்கள்! 32
14. சோர்வை மேற்கொள்ளுங்கள்! 34
15. துக்கத்தை மேற்கொள்ளுங்கள்! 36
16. கலக்கத்தை மேற்கொள்ளுங்கள்! 38
17. பெலவீனத்தை மேற்கொள்ளுங்கள்! 40
18. வியாதியை மேற்கொள்ளுங்கள்! 42
19. ஆபத்தை மேற்கொள்ளுங்கள்! 44
20. குறைவை மேற்கொள்ளுங்கள்! 46

III. விசுவாச வசனங்கள் 48

IV. வாங்கிவிட்டீர்கள்? 50




## தேவனை ஸ்தோத்தரிப்போம்

**'ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்' (சங் 50:23)**

* பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே!
* தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவே!
* பரிசுத்த தேவ ஆவியானவரே!
* மரணத்தை ஜெயமாக விழுங்கினவரே!
* திடநம்பிக்கையைத் தருகிறவரே!
* மிகுந்த தைரியத்தைத் தருகிறவரே!
* தோல்வியை ஜெயமாக மாற்றுகிறவரே!
* தழும்புகளால் குணமாக்குகிறவரே!
* துக்கத்தை சந்தோஷமாக்குகிறவரே!
* பெலவீனத்தில் பெலன் தருகிறவரே!
* மிகுந்த சந்தோஷத்தைத் தருகிறவரே!
* பாவத்திலிருந்து விடுவிக்கிறவரே!



* ஆபத்தில் அனுகூல துணையானவரே!
* சாபத்தை ஆசீர்வாதமாக்குகிறவரே!
* சூழ்நிலையை சாதகமாக்குகிறவரே!
* விசுவாசத்தைத் துவக்குகிறவரே!
* சாத்தானைத் தோற்கடித்தவரே!
* சாத்தானை ஜெயமெடுத்தவரே!
* விசுவாசத்தை பெருகச் செய்கிறவரே!
* குறைவை நிறைவாக்குகிறவரே!
* பெலவீனங்களை மாற்றுகிறவரே!
* மிகுந்த தைரியத்தைத் தருகிறவரே!
* கவலையில் ஆறுதல் தருகிறவரே!
* அடிமைத்தனத்தை முறிக்கிறவரே!
* பிரச்சினைகளிலிருந்து விடுவிப்பவரே!

**'கர்த்தருடைய நாமம் ஸ்தோத்தரிக்கப் படுவதாக' (சங் 113:2)**

## 1. அவிசுவாசத்தை மேற்கொள்ளுங்கள்!

**'விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப் பான்' (கலா 3:11)**

- என்னுடைய விசுவாசமே இந்த உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்... (Iயோவா 5:4)
- நான் விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறேன்... (எபே 6:16)
- நான் விசுவாசமென்னும் மார்க்கவசத்தைத் தரித்துக் கொண்டிருக்கிறேன்... (Iதெச 5:8)
- நான் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன் (ரோம 5:1)
- என்னுடைய விசுவாசம் தேவனுடைய பெலத்தில் இருக்கிறது... (Iகொரி 2:4)
- இயேசுவின் மேலுள்ள விசுவாசமே என்னை இரட்சிக்கும்... (மத் 9:22)



- விசுவாசத்தினால் கிறிஸ்து என் இருதயத்தில் வாசமாயிருக்கிறார்... (எபே 2:17)
- விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, பொறுமையோடே ஓடுவேன்... (எபி 12:1)
- நான் விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவேன்... (கொலோ 2:7)
- என்னை மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் என்னை உறுதிப்படுத்திக்கொள்வேன்... (யூதா 1:20)
- இயேசுவைப் பற்றும் விசுவாசத்தால் எனக்குத் தைரியம், திடநம்பிக்கை உண்டாயிருக்கிறது... (எபே 3:12)
- நான் விசுவாசித்திருக்கிற இயேசு என்னைக் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார்... (IIதீமோ 1:12)

## 2. பிரச்சினையை மேற்கொள்ளுங்கள்!

**'கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்' (யாத் 14:14)**

* நான்... என்னில் அன்பு கூருகிற இயேசுவாலே எல்லாப் பிரச்சினைகளிலும் ஜெயங்கொள்ளுகிறவனாயிருக்கிறேன்... (ரோம 8:17)
* என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாப் பிரச்சினையையும் மேற்கொள்வேன்... (பிலி 4:13)
* இயேசுகிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் நான் ஜெயம் எடுப்பேன்... (IIகொரி 2:14)
* இயேசுவாகிய ஆண்டவர் பிரச்சினைகளிலிருந்து விடுவிக்க எனக்குக் துணைசெய்கிறார்... (ஏசா 50:7)
* இயேசு என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை... (சங் 16:8)



* பிரச்சினைகளை நீக்கிப்போடுகிற இயேசு எனக்கு முன்பாக நடந்து போகிறார்... (மீகா 2:13)
* இயேசு எனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவார்... (ஏசா 45:2)
* எனக்கு விரோதமாய் கூடுகிறவர்கள் என் பட்சத்தில் வருவார்கள்... (ஏசா 54:15)
* எனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்... (ஏசா 54:17)
* வானத்தையும் பூமியையும் உண்டாக்கின இயேசுவிடமிருந்து எனக்கு ஒத்தாசை வரும்... (சங்121:2)
* உலகத்திலிருக்கிறவனிலும் என்னிலிருக்கிற இயேசு பெரியவர்; ஆதலால், பிரச்சினைகள் என்னை மேற்கொள்ளாது... (Iயோவா 4:4)

## 3. பாவத்தை மேற்கொள்ளுங்கள்!

**'நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்' (Iபேது 1:16)**

* இயேசுகிறிஸ்துவின் இரத்தம் என்னுடைய சகல பாவங்களையும் நீக்கி சுத்திகரிக்கும்... (Iயோவா 1:7)
* இயேசுவே என்னைப் பரிசுத்தமாக்குகிறவர்... (லேவி 21:15)
* இயேசுகிறிஸ்து என்னை அசுத்தத்திற்கல்ல; பரிசுத்தமாய் வாழ அழைத்திருக்கிறார்... (Iதெச 4:7)
* இயேசுகிறிஸ்துவினிடத்தில் பாவமில்லை. அவரில் நிலைத்திருக்கிற நானும் இனி பாவஞ்செய்வதில்லை (Iயோவா3:5,6)
* இயேசு என்னைப் பாவமற சுத்திகரிப்பதற்கு உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (Iயோவா 1:9)
* இயேசுவால் பிறந்த நான் பாவஞ் செய்யேன். ஏனெனில், அவருடைய வசனம் எனக்குள் தரித்திருக்கிறது... (Iயோவா 3:9)
* நான்... ஆவிக்கேற்றபடி நடந்து மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பேன்... (கலா 5:16)
* நான்... பரிசுத்தமாக்கப்பட்ட கனத்துக்குரிய பாத்திரம்... (IIதீமோ 2:21)
* நான்... என் சரீரத்தைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்திருக்கிறேன்... (ரோம 12:1)
* நான்... என் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டு கொள்ளுவேன்... (Iதெச 4:5)
* நான்... கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் என்னை மேற்கொள்ளாது... (ரோம 6:14)

## 4. சாபத்தை மேற்கொள்ளுங்கள்!

**'இனி ஒரு சாபமும் இராது'**
**(வெளி 23:3)**

* இயேசுவே எனக்குப் பரிகாரியாக இருக்கிறார்... (யாத் 15:26)
* இயேசு எனக்காக சிலுவையிலே பலியாகி சாபத்திலிருந்து என்னை மீட்டுக்கொண்டார்... (யோவா 8:36)
* நான்... இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப் பட்டிருக்கிறேன்... (Iபேது 1:19)
* இயேசுகிறிஸ்து தம்முடைய சுயரத்தத்தினாலே என்னை சம்பாதித்துக் கொண்டார்... (அப் 20:28)
* இயேசுவின் இரத்தம் என் வாழ்வின் சாபங்களை நீக்கும்... (Iயோவா 1:7)
* இயேசு என்மேல் அன்புகூர்ந்தபடியினால், சாபத்தை எனக்கு ஆசீர்வாதமாக மாறப்பண்ணுவார் (உபா 23:5)
* நான் இயேசுவுக்குள் இருப்பதால் என் வாழ்வின் சாபங்கள் யாவும் ஒழிந்துபோயின. எல்லாம் புதிதாயின... (IIகொரி 5:17)
* நான் கிறிஸ்துவினுடையவனாகவும், அவருடைய சுதந்தரனாயும் இருக்கிறேன்... (கலா 3:29)
* எனக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் தண்டனையை இயேசு ஏற்றுக்கொண்டதால் என் சாபம் நீங்கினது... (ஏசா 53:5)
* இயேசுவின் ஆவியானவர் என்னில் இருப்பதால் நான் சாபத்திலிருந்து விடுவிக்கப்பட்டேன் (IIகொரி 3:17)
* நான் இயேசுவாலே பெற்ற அபிஷேகத்தினால் என் சாபங்கள் முறிந்து போகிறது... (ஏசா 10:27)

## 5. கோபத்தை மேற்கொள்ளுங்கள்!

**'மனுஷனுடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே' (யாக் 1:20)**

* நான்... என்னில் அன்புகூருகிற இயேசுவாலே கோபத்தை மேற் கொள்வேன்... (ரோம 8:17)
* இயேசு... தம்மைத்தாமே தாழ்த்தி னதைப் போல நானும் என்னைத் தாழ்த்துவேன்... (பிலி 2:8)
* கிறிஸ்துவுக்குள் தேவன் என்னை மன்னித்ததுபோல, நானும் மற்றவர் களை மன்னிப்பேன்... (எபே 4:32)
* நான் மனத்தாழ்மையினாலே மற்ற வர்களை என்னிலும் மேன்மையுள்ள வர்களாக எண்ணுவேன்... (பிலி 2:3)
* நான் முற்கோபமில்லாதவனாயிருந்து உண்மையான வசனத்தை நன்றாய் பற்றிக்கொள்வேன்... (யாக் 1:19)
* நான் மற்றவர்களை கோபமூட்டாமல் இருப்பேன்... (கலா 5:26)
* நான்... என் உபத்திரவத்திலே பொறு மையாய் இருப்பேன்... (ரோம 12:12)
* நான் எல்லாரிடத்திலும் நீடிய சாந்த மாயிருப்பேன்... (Iதெச 5:14)
* நான் நீதியாகிய கனியான சமாதா னத்தை நடப்பிப்பேன்... (யாக் 3:18)
* நான் அன்பினால் மற்றவர்களைத் தாங்குவேன்... (எபே 4:3)
* நான் என்னை தேவப்பிள்ளையாக விளங்கப்பண்ணுவேன் (IIகொரி 6:3)
* நான் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே என் கிரியைகளை நல்ல நடக்கையி னாலே காண்பிப்பேன்... (யாக் 3:13)
* கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவ ருக்குப் பாத்திரனாய் நடந்துகொள் வேன்... (கொலோ 1:11)

## 6. இச்சையை மேற்கொள்ளுங்கள்!

**‘கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்’(ரோம 13:14)**

* நான் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக் கிறபடியால், இச்சை என்னை மேற் கொள்ளாது... (ரோம 6:14)
* நான்... மாம்ச இச்சைகளை விட்டு விலகி, நல்நடக்கையுள்ளவனாய் நடந்துகொள்வேன்... (Iபேது 2:11)
* நான்... இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் இச்சைக ளுக்குத் தப்புவேன்... (IIபேது 2:20)
* நான்... என் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறேன்... (கலா 5:24)
* இச்சையினால் உலத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, நான் கிறிஸ்துவின் திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ள வனாயிருக்கிறேன்... (IIபேது 1:4)

* நான் ஆவிக்கேற்றபடி நடந்து மாம்ச இச்சைகளை நிறைவேற்றாதிருப் பேன்... (கலா 5:16)
* என் மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுத்தமும் நீங்க, என்னைச் சுத்திகரித்துக் கொள் வேன்... (IIகொரி 7:1)
* நான்... மோசம்போக்கும் இச்சை களாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை களைந்துபோட்டு, தேவ னுடைய சாயலாக சிருஷ்டிக்கப் பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்கிறேன்... (எபே 22-24)
* நான் பரிசுத்தமுள்ளவனும் பிழையற் றவனுமாக கிறிஸ்துவுக்கு முன்பாக நிற்பேன்... (எபே 5:27)
* வழுவாதபடி என்னைக் காக்கவும், மாசற்றவனாய் நிறுத்தவும் இயேசு வல்லமையுள்ளவர்... (யூதா 1:24)

## 7. பெருமையை மேற்கொள்ளுங்கள்!

**'இயேசு தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்' (Iபேது 5:5)**

* நான் இயேசுவிடமிருந்து அதிகமான கிருபையைப் பெற்றுக்கொள்ளும்படி தாழ்மையாய் நடப்பேன்... (யாக் 4:4)
* ஒன்றையும் வீண் பெருமையினால் செய்யாமல், மனத்தாழ்மையினாலே மற்றவர்களை மேன்மையுள்ளவர்களாக எண்ணுவேன்... (பிலி 2:3)
* என் வாழ்வின் பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின... (IIகொரி 5:17)
* இயேசுவுக்கு முன்பாகத் தாழ்மையாய் நடந்துகொள்வேன், அவர் என்னை உயர்த்துவார்... (யாக் 4:10)
* இயேசுவினுடைய வசனம் எனக்குள் தரித்திருக்கிறது... (Iயோவா 3:9)



* நான் விழுந்துபோவதில்லை; இயேசு தமது கையினால் என்னைத் தாங்குகிறார்... (சங் 37:24)
* பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, இயேசுவினுடைய ஆவியினாலேயே ஆகும்... (சக 4:6)
* என்னைப் பாவத்திற்கு மரித்தவனாகவும், இயேசுவுக்குள் பிழைத்திருக்கிறவனாகவும் எண்ணுகிறேன்... (ரோம 6:11)
* நான் உலகத்திற்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறேன்... (கலா 6:14)
* நான் இயேசுவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டேன்; இயேசுவே எனக்குள் பிழைத்திருக்கிறார் (கலா 2:20)
* என் சரீரமானது நான் இயேசுவாலே பெற்றும், என்னில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது... (Iகொரி 6:19)

## 8.தாழ்வுமனப்பான்மையைமேற்கொள்!

**'இயேசுவே, நீரே என் நம்பிக்கை'**
**(சங் 39:7)**

* இயேசு என் ஞானமும், நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார் (Iகொரி 1:31)
* நான் இயேசுவை நம்பியிருக்கிறேன்; அவருடைய கிருபை என்னை சூழ்ந்துகொள்ளும்... (சங் 32:10)
* இயேசு மகிமையின் நம்பிக்கையாக எனக்குள் இருக்கிறார் (கொலோ 1:27)
* இயேசு என் வெளிச்சமும், என் இரட்சிப்புமானவர்... (சங் 27:1)
* என்னிலிருக்கிற இயேசு பெரியவர் (Iயோவா 4:4)
* இயேசு என்னை விசாரிக்கிறவர் (Iபேது 5:7)
* இயேசுவாலே நான் எல்லாவற்றையுஞ்செய்து முடிப்பேன்... (பிலி 4:13)



* இயேசு என்னை வெற்றி சிறக்கப் பண்ணுவார்... (IIகொரி 2:14)
* நான் இயேசுவாலே ஜெயங்கொள்ளுவேன்... (ரோம 8:17)
* நான் பராக்கிரமசாலி; இயேசு என்னோடு இருக்கிறார் (நியா 6:12)
* நான் வெட்கப்பட்டுப்போவதில்லை (சங் 22:5)
* நான் செய்வதெல்லாம் வாய்க்கும் (சங் 1:3)
* நான் நம்புகிறது இயேசுவாலே வரும்... (சங் 62:5)
* இயேசு என் குறைவையெல்லாம் நிறைவாக்குவார்... (பிலி 4:19)
* இயேசு... என்னை கீழாக்காமல் மேலாக்குவார்... (உபா 28:14)
* இயேசு என்னை சிறந்திருக்கும்படிச் செய்வார்... (உபா 26:19)

## 9. அடிமைத்தனத்தை மேற்கொள்ளுங்கள்!

**'இருளின் அதிகாரத்தினின்று இயேசு விடுதலையாக்கி...' (கொலோ 1:13)**

* நான் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவி காரத்தின் ஆவியைப் பெற்றிருக் கிறேன்... (ரோம 8:15)
* இயேசு இருளின் அதிகாரத்தினின்று என்னை விடுதலையாக்கியிருக்கி றார்... (கொலோ 1:13)
* நான் பெற்ற அபிஷேகத்தினால் என் அடிமைத்தனத்தின் நுகம் முறிந்து போம்... (ஏசா 10:27)
* இயேசு என் துக்கத்தையும், என் தத்தளிப்பையும், என் அடிமைத்தனத் தையும் நீக்கி என்னை இளைப்பாறப் பண்ணுவார்... (ஏசா 14:3)



* என்னை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும்படிக்கு இயேசு தமது மரணத்தினாலே பிசாசானவனை அழித்தார்... (ஏசா 14:3)
* நான் பாவத்தினின்று விடுதலை யாக்கப்பட்டு இயேசுவுக்கு அடிமை யாயிருக்கிறேன்... (ரோம 6:22)
* இயேசு என்னை அடிமைத்தனத்தி லிருந்து மீட்டுக்கொண்டார் (மீகா 6:4)
* இயேசு என்னை அடிமைத்தனத் திற்கு நீங்கலாக்கி தமது பிள்ளை யாக சேர்த்துக்கொண்டார் (யாத் 6:6)
* சத்துருவினுடைய சகல வல்லமை யையும் மேற்கொள்ள இயேசு எனக்கு அதிகாரங் கொடுத்திருக் கிறார்... (லூக் 10:19)
* நான் இயேசுவின் பிள்ளையாயி ருப்பதால், அவருடைய சுதந்தரரு மாயிருக்கிறேன்... (ரோம 8:17)

## 10. சத்துருவை மேற்கொள்ளுங்கள்!

'சத்துருக்களும் அவனோடே சமாதான மாகும்படி செய்வார்' (நீதி 16:7)

* இயேசுவே, நீர் என் வழக்காளி களோடே வழக்காடி ஜெயத்தைத் தருவீர்... (சங் 35:1)
* என்னைத் துன்பப்படுத்துகிறவர் களோடே எதிர்த்து நின்று இயேசு என்னைத் தப்புவிப்பார்... (சங் 35:3)
* இயேசு எனக்குத் தீங்கு செய்ய நினைக்கிறவர்களை வெட்கமடையச் செய்வார்... (சங் 35:4)
* என் சத்துருக்களுக்கு முன்பாக இயேசு எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்துவார்... (சங் 23:5)
* எனக்கு விரோதமாய் உருவாக் கப்படும் எந்தவொரு ஆயுதமும் வாய்க்காதேபோம்... (ஏசா 54:17)



* என்மேல் எரிச்சலாயிருக்கிற யாவ ரும் வெட்கப்பட்டு போவார்கள்; என்னோடே யுத்தம் பண்ணின மனுஷர் ஒன்றுமில்லாமல் போவார் கள்... (ஏசா 41:11,12)
* இயேசு என்னைப் பொல்லாதவர் களின் கைக்குத் தப்புவித்து, பல வான்களின் கைக்கு நீங்கலாக்கி விடுவிப்பார்... (எரே 15:21)
* இன்று கண்ட என் சத்துருவை இனி என்றுமே நான் காண்பதில்லை... (யாத் 14:13)
* எவர்கள் எனக்கு விரோதமாய்க் கூடுகிறார்களோ, அவர்கள் என் பட் சத்தில் வருவார்கள்... (ஏசா 54:15)
* என்னை ஒடுக்கினவர்களும் அசட்டை பண்ணினவர்களும் என் காலடியில் பணியும்படி இயேசு செய்வார்... (ஏசா 61:14)

## 11. தோல்வியை மேற்கொள்ளுங்கள்!

**‘இயேசுவே, ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்’ (I நாளா 29:11)**

* இயேசுகிறிஸ்துவினாலே எனக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்... (Iகொரி 15:57)
* என்னில் அன்புகூரும் இயேசுவாலே ஜெயங்கொள்வேன்... (ரோம 8:37)
* இயேசு எனக்கு துணை நிற்கிறார் (ஏசா 40:)
* இயேசுவால் எனக்கு ஜெயம் வரும் (நீதி 21:31)
* இயேசு என்னை வெற்றி சிறக்கப் பண்ணுவார்... (IIகொரி 2:14)
* இயேசு எனக்கு வெற்றியைக் கட்டளையிடுவார்... (நியா 11:36)
* இயேசுவே, எனக்கு ஜெயத்தைத் தருகிறவர்... (சங் 104:10)



* சிலுவையின்மேல் வெற்றிசிறந்த இயேசுவால் நான் எல்லாவற்றிலும் ஜெயமெடுப்பேன்... (கொலோ 2:15)
* நான் இயேசுவை விசுவாசிப்பதால் இந்த உலகத்தை ஜெயிப்பேன்... (Iயோவா 5:5)
* நான் இயேசுவால் தோல்வியை எளிதாய் ஜெயிப்பேன்... (எண் 13:30)
* நான்... தோல்வியை மேற்கொள் வேன்; ஏனெனில் இயேசு உலகத்தை ஜெயித்தார்... (யோவா 16:33)
* நான் இயேசுவின் இரத்தத்தினாலும் என் சாட்சியின் வசனத்தினாலும் சாத் தானை ஜெயிப்பேன்... (வெளி 12:11)
* நான் தீமையை நன்மையினாலே வெல்லுவேன்... (ரோம 12:21)
* இயேசு என்மேல் பிரியமாயிருப் பதினால் சத்துரு என்னை ஜெயங் கொள்ள முடியாது... (சங் 41:11)

## 12. பயத்தை மேற்கொள்ளுங்கள்!

**'கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார்'**
**(சங் 118:6)**

* நான்... பயப்படுகிறதற்கு அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப் பண்ணும் புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றுள்ளேன்... (ரோம 8:15)
* இயேசு... எனக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்... (IIதீமோ 1:7)
* நான்... பயப்படாதிருப்பேன்; இயேசு என்னோடேகூட இருக்கிறார்... (யாத் 14:13; ஏசா 43:5)
* நான்... பயப்படும் நாளில் இயேசுவை நம்புவேன்... (சங் 56:3)
* நான்... ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பேன்... (நீதி 1:33)



* இயேசு எனக்குக் கேடகமும், மகா பெரிய பலனுமாயிருக்கிறார்... (ஆதி 15:1)
* இயேசுவே... என் இரட்சிப்பு; நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன் ... (ஏசா 12:2)
* நான்... பயமில்லாதிருப்பேன். திகிலுக்குத் தூரமாவேன், அது என்னை அணுகுவதில்லை... (ஏசா 54:14)
* நான்... இயேசுவை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்... (சங் 56:4)
* நான்... மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன் ; இயேசு என்னோடேகூட இருக்கிறார் (சங் 23:4)
* நான்... இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பேன்... (சங் 91:5,6)

## 13. கவலையை மேற்கொள்ளுங்கள்!

**'கவலைப்படாதிருங்கள்' (மத் 6:30)**

* நான்... கவலையற்றவனாயிருக்க வேண்டுமென்பதே என்னைக் குறித்து இயேசுகிறிஸ்துவின் விருப்பமாயிருக்கிறது... (Iகொரி 7:32)
* இயேசுவே, நீர் என்னை விசாரிக்கிறவரானபடியால், என் கவலைகளையெல்லாம் உம்மேல் வைத்து விடுகிறேன்... (Iபேது 5:7)
* இயேசுவின்மேல் என் பாரத்தை வைத்து விடுவேன், அவர் என்னை ஆதரிப்பார்; என்னை ஒருபோதும் தள்ளாடவொட்டார்... (சங் 55:22)
* நான்... கவலையில்லாமல் என் இயேசுவைப் பற்றிக்கொண்டிருப்பேன்... (Iகொரி 7:35)
* நான்... என் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்பேன் என்று என் சரீரத்திற்காகவும் கவலைப்படாதிருப்பேன்... (மத் 6:25)



* நான்... நாளைக்காகக் கவலைப்படமாட்டேன்; நாளைய தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும்... (மத்6:34)
* நான்... மற்றவர்களைப் போல மற்ற காரியங்களைக் குறித்து கவலைப்பட்டு கலங்கமாட்டேன்... (லூக் 10:41)
* நான்... கவலைப்படமாட்டேன்; இயேசுகிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே என்னுடைய பெலன்... (நெகே 8:10)
* நான்... ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து என் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் இயேசுவுக்குத் தெரியப்படுத்துவேன்... (பிலி 4:6)

## 14. சோர்வை மேற்கொள்ளுங்கள்!

**'சோர்ந்துபோகிறவனுக்கு இயேசு பெலன் கொடுக்கிறார்' (ஏசா 40:29)**

* சோர்ந்துபோகமல் எப்பொழுதும் நான் ஜெபம்பண்ணுவேன் (லூக் 18:1)
* நான்... இளைப்புள்ளவனாய் என் ஆத்துமாவில் சோர்ந்துபோகாமல் இயேசுகிறிஸ்துவையே நினைத்துக் கொள்ளுவேன்... (எபி 12:3)
* நான் உபத்திரவங்களினால் சோர்ந்து போகாதிருப்பது எனக்கு மகிமை யாயிருக்கிறது... (எபே 3:13)
* சோர்ந்துபோகமால் நற்கிரியை களைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுவேன்... (ரோம 2:7)
* நான் இயேசுவால் கடிந்துகொள் ளப்பட்டாலும் சோர்ந்துபோகமாட் டேன்... (எபி 12:5)



* ஆபத்துக்காலத்தில் நான் சோர்ந்து போகமாட்டேன்... (நீதி 24:10)
* என் ஆத்துமா சோர்ந்துபோகும் பொழுது நான் இயேசுவைத் தேடு வேன்... (உன் 5:6)
* எனக்கு விரோதமாகப் போராடும் சத்துருவினிமித்தம் நான் சோர்ந்து போகமாட்டேன்... (மாற் 9:18)
* அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவத்தினால் நான் சோர்ந்து போவதில்லை... (IIகொரி 3:17,16)
* இயேசுவுக்குக் காத்திருக்கிற நான் புதுப்பெலன் அடைந்து, கழுருக ளைப் போல செட்டைகளை அடித்து எழும்புவேன்; நான் சோர்ந்து போகமாட்டேன்... (ஏசா 40:31)
* இயேசு எனக்குத் துணையாக நின்று... என்னைப் பெலப்படுத்து கிறார்... (IIதீமோ 4:17)

## 15. துக்கத்தை மேற்கொள்ளுங்கள்!

**‘உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்’**
**(யோவா 16:20)**

* இயேசு என் துக்கத்தை சந்தோஷமாக மாற்றி... என் சஞ்சலம் நீங்க என்னைச் சந்தோஷப்படுத்துவார்... (எரே 31:13)
* இயேசுவே எனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார்; என் துக்கநாட்கள் முடிந்துபோம்... (ஏசா 60:20)
* இயேசு என் துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவார்... (யோவா 16:20)
* இயேசு என் துக்கத்தையும், என் தத்தளிப்பையும், என் அடிமைத்தனத்தையும் நீக்கி என்னை இளைப்பாறப்பண்ணுவார்... (ஏசா 14:3)
* நான்... துக்கத்தின்மேல் துக்கம் அடையாதபடிக்கு இயேசு எனக்கு இரங்குவார்... (பிலி 2:27)
* இயேசு என்மேல் மகிழ்ச்சியாயிருப்பார்; அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமும் என்னில் இனிக் கேட்கப்படுவதில்லை... (ஏசா 65:19)
* துக்கப்படுகிற எனக்கு இயேசு ஆறுதல் அளிப்பார்... (ஏசா 57:19)
* நான்... துக்கப்படுகிறவன் என்னப்பட்டாலும், இயேசுவுக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பேன்... (IIகொரி 6:10)
* என்... வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்; இலச்சைக்குப் பதிலாக என் பாகத்தில் சந்தோஷப்படுவேன்... (ஏசா 61:7)
* ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல இயேசு என்னைத் தேற்றுவார்... (ஏசா 66:13)
* நான்... இயேசுவுக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன்... (ஆப 3:18)

## 16. கலக்கத்தை மேற்கொள்ளுங்கள்!

**'உங்கள் இருதயம்... கலங்காமல் இருப்பதாக' (யோவா 14:27)**

* என் ஆத்துமாவே, நீ கலங்காதே; நீ எனக்குள் திகையாதே. இயேசுவை நோக்கிக் காத்திரு... (சங் 43:5)
* என் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருக்கும் (யோவா 14:27)
* நான்... மனுஷரின் நிந்தனைக்குப் பயப்படாமலும், அவர்கள் தூஷணங்களால் கலங்காமலும் இருப்பேன்... (ஏசா 51:7)
* நான்... என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் வெட்கப்படாமலும் கலங்காமலும் இருப்பேன்... (ஏசா 45:17)
* நான் கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை... (IIகொரி 4:8)



* இயேசு எனக்குச் சமாதானம் அருளியிருக்க என்னைக் கலங்கப்பண்ண ஒருவனாலும் முடியாது (யோபு 34:30)
* நான் கலக்கமடையாதபடிக்கு மற்றவர்கள் முகத்துக்கு அஞ்சாதிருப்பேன்... (எரே 1:17)
* மற்றவர்களின் பயமுறுத்தலுக்கு நான் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து இயேசுவை என் இருதயத்தில் பரிசுத்தம்பண்ணுவேன் (Iபேது 3:14,15)
* நான் உலகக் காரியங்களைக் குறித்து கவலைப்பட்டு கலங்கமாட்டேன் ... (லூக் 10:41)
* எனக்கு விரோதமாக எழும்பும் சத்துருவின் வல்லமையைக் கண்டு நான் கலங்கமாட்டேன்... (உபா 20:3)
* என் தேவனாகிய இயேசு தாமே எனக்காக யுத்தம் பண்ணுவார்... (உபா 3:22)

## 17. பெலவீனத்தை மேற்கொள்ளுங்கள்!

**'இயேசுகிறிஸ்து என் ஜீவனின் பெலனானவர்' (சங் 27:1)**

* ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து என் பெலன்... (ஆப 3:19)
* என்னைப் பெலப்படுத்தும் இயேசு கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு... (பிலி 4:13)
* இயேசு... எனக்குப் பலமுள்ள ஆவியைக் கொடுத்திருக்கிறார்... (IIதீமோ 1:7)
* இயேசுவே! நான்... உமது ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படுவேன்... (எபே 3:16)
* நான்... இயேசுவிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுவேன்... (எபே 6:10)



* நான்... இயேசுவுக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே என்னுடைய பெலன்... (நெகே 8:10)
* இயேசு... எனக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்... (சங் 46:1)
* இயேசு... என்னைப் பலத்தால் இடைகட்டி, என்வழியைச் செவ்வைப்படுத்துகிறார்... (சங் 18:32)
* இயேசுவே... உம் கிருபை எனக்குப் போதும்; பலவீனத்திலே உம்முடைய பலம் பூரணமாய் விளங்கும்... (IIகொரி 12:9)
* இயேசுவே நான் உம்மிடம் வைக்கும் விசுவாசத்தினாலே பெலவீனத்தில் பெலன்கொள்வேன் (எபி 11:34)
* நான்... பராக்கிரமசாலி; கர்த்தர் என்னோடு இருக்கிறார் (நியா 6:12)

## 18. வியாதியை மேற்கொள்ளுங்கள்!

'நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்'
(யாத் 15:26)

* நான்... இயேசுவின் தழும்புகளால் குணமாகிறேன்... (Iபேது 2:24)
* இயேசுகிறிஸ்துதாமே என் பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு என் நோய்களைச் சுமந்தார்... (மத் 8:17)
* இயேசு... பிணியாளிகள் எல்லாரையும் சுகமாக்கினார்... (மத் 8:16) என்னையும் சுகமாக்குவார்...
* இயேசு... என் வியாதியை என்னிலிருந்து விலக்குவார்... (யாத் 23:25)
* இயேசு... தமது வசனத்தை அனுப்பி என்னைக் குணமாக்குவார்... (சங் 107:20)
* இயேசுவே... நீர் என் காயங்களை ஆற்றுவீர்... (எரே 30:1)
* இயேசுவே... நீர் என் கண்ணீரைக் கண்டீர்; என்னைக் குணமாக்குவீர்... (IIஇரா 20:5)
* இயேசுவே... உம்மிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு என்னைக் குணமாக்குகிறது... (லூக் 6:19)
* இயேசு... என் வியாதி படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவார்... (சங் 41:3)
* வாதை என் கூடாரத்தை அணுகாது... (சங் 91:10)
* நான்... வேதனை நீங்கி ஆரோக்கியமடைவதை உணருவேன் (மாற் 5:29)
* நான்... சமாதானத்தோடே போய் என் வேதனை நீங்கி சுகமாயிருப்பேன்... (மாற் 5:34)
* நான் குணமானதற்காக இயேசுவை மகிமைப்படுத்துவேன்... (லூக் 17:16)

## 19. ஆபத்தை மேற்கொள்ளுங்கள்!

**'பொல்லாப்பு எனக்கு நேரிடாது'**
**(சங் 91:10)**

* இயேசு எனக்கு அடைக்கலமும் ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்... (சங் 46:1)
* ஆபத்துக்காலத்தில் இயேசு என் ஜெபத்தைக் கேட்பார்... (சங் 20:1)
* ஆபத்துநாளில் என் இயேசுவைத் தேடுவேன்... (சங் 77:2)
* ஆபத்துக்காலத்தில் இயேசுவை நோக்கிக் கூப்பிடுவேன்; அவர் என்னை விடுவிப்பார்... (சங் 50:15)
* ஆபத்துநாளில் இயேசு எனக்கு ஆதரவாயிருப்பார்... (சங் 18:18)
* ஆபத்தில் இயேசு என்னோடிருந்து, என்னைத் தப்புவித்து கனப்படுத்துவார்... (சங் 91:15)



* ஆபத்துக்காலத்தில் நான் சோர்ந்து போகாதிருப்பேன்... (நீதி 24:10)
* நான் ஆபத்துக்காலத்திலே வெட்கப்பட்டுப்போவதில்லை (சங்37:19)
* நான்... என் ஆபத்திலே இயேசுவை நோக்கிக் கூப்பிடுவேன், அவர் என் இக்கட்டுகளிலிருந்து என்னை விடுவிப்பார்... (சங் 107:6)
* ஆபத்துக்காலத்தில் என்னைத் தப்புவிப்பதற்கு இயேசு என்னோடிருக்கிறார்... (எரே 15:20)
* தீங்கு நாளில் இயேசு... என்னைத் தமது கூடாரமறைவிலே ஒளித்து வைப்பார்... (சங் 27:5)
* இயேசு என்னோடே இருந்து, நான் போகிற இடத்திலெல்லாம் என்னைக் காப்பார்... (ஆதி 28:15)
* இயேசுவே! உம் சமுகம் எனக்கு முன்பாகச் செல்லும்... (யாத் 33:14)

## 20. குறைவை மேற்கொள்ளுங்கள்!

**'கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது' (சங் 34:10)**

* நிறைவான இயேசுவானவர் எனக்குள் இருப்பதால் என்னுடைய குறைவுகள் ஒழிந்துபோம்... (Iகொரி 13:10)
* என் இயேசு தம்முடைய ஐசுவரியத்தின்படி என் குறைவையெல்லாம் நிறைவாக்குவார்... (பிலி 4:19)
* இயேசுவைத் தேடுகிற எனக்கு ஒரு நன்மையுங் குறைவுபடாது... (சங் 34:10)
* யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிற இயேசு என் குறைவுகளை நிறைவாக்குவார்... (யாக் 1:5)
* திராட்சரசங் குறைவுபட்டபோது அற்புதம் செய்த இயேசு என் குறைவுகளையும் நிறைவாக்குவார்... (யோவா 2:8)



* நான் இயேசுவால் ஒன்றிலும் குறைவுள்ளவனாயிராமல் பூரணனாயும், நிறைவுள்ளவனாயுமிருப்பேன்... (யாக் 1:4,5)
* மற்றவர்களுடைய குறைவுகளில் நான் உதவி செய்வேன்... (Iயோவா 3:17)
* இயேசுவினுடைய ஆசீர்வாதம் என்மேல் இருக்கும்... (சங் 3:8) ஆதலால் நான் குறைவுபடுவதில்லை.
* இயேசு என்னை அநேகருக்குக் கடன் கொடுக்கும்படி உதவி செய்வார்... (உபா 15:6)
* இயேசு என் அப்பத்தையும் என் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார் (யாத் 23:25)
* இயேசு என் கைகளின் கிரியையை ஆசீர்வதிப்பார்... (யோபு 1:10)
* இயேசு என்னை ஆயிரமடங்கு அதிகமாகும்படி ஆசீர்வதிப்பார் (உபா 1:11)

## விசுவாச வசனங்கள்!

'இயேசுவை விசுவாசி' (அப் 16:31)

* நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் (யோவா 11:40)
* விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது... (எபி 11:1)
* நீங்கள்... விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்... (மத் 21:22)
* விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்... (கலா 3:11)
* நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்... (Iயோவா 5:4)
* விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்... (மாற் 9:23)

## வாங்கிவிட்டீர்களா?

**வேதாகமத்தில் வைத்து ஜெபிக்க முழங்கால் யுத்த ஜெபக்கையேடுகள்**

| | | |
|---|---|---|
| 1. | துதி பலிகள் | ரூ. 10/- |
| 2. | பிரார்த்தனை நேரம் | ரூ. 5/- |
| 3. | குடும்ப ஆசீர்வாதங்களுக்காக | ரூ. 5/- |
| 4. | விடுதலைக்காக | ரூ. 5/- |
| 5. | ஜெப சங்கீதம் | ரூ. 5/- |
| 6. | தேவனின் பாதத்தில் | ரூ. 5/- |
| 7. | இயேசுவின் அற்புதங்கள் | ரூ. 5/- |
| 8. | வெற்றி வாழ்விற்காக | ரூ. 5/- |
| 9. | கட்டுகளிலிருந்து விடுதலை | ரூ. 10/- |
| 10. | Prayer Time | ரூ. 10/- |

*இந்த ஜெபக்கையேடுகள் மூலம் எளிமையான முறையில் பிரார்த்தனை செய்து அற்புதத்தையும், ஆசீர்வாதத்தையும் பெறுங்கள்!*

**ஜெபவீரர்கள்... இந்த ஜெபக்கையேடுகளை வாங்கி மற்றவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்து ஜெபிக்க வையுங்கள்!**

## உங்களுக்காக ஜெபிக்க...

உங்களுக்காக ஜெபிக்க நாங்கள் ஆயத்தமாயிருக்கிறோம்! உங்கள் ஜெபத்தேவைகளுக்காக கடிதம் அல்லது தொலைபேசி மூலமாக எங்களோடு தொடர்புகொள்ளுங்கள்

## 24-மணி நேரமும்...

*தொலைபேசியில் ஜெபிக்க!*

04344 221616, 226363


***முழங்கால் யுத்தம்***

46/AA, சாந்தி நகர் மேற்கு,

3வது தெரு, ஓசூர் - 635 109

Email:muzhangalyuttham@yahoo.com

# MUZHANGAL YUTTHAM

## "LIFE OF VICTORY"



Contact Address:

**MUZHANGAL YUTTHAM**

P. B. No: 40, Hosur - 635 109